IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW7

| | |
|---|---|
| Name : ஜெயா | Father Name : |
| Village : | Calling : |
| Taluk : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2025 சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் மேட்டூரில் வசித்து வந்து ஸ்டாப் நர்சாக மேட்டூர் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். எனது கணவர் ஆதித்தமிழர் பேரவை கட்சியில் மாவட்ட செயலாளராக உள்ளார். பெருமாள் என்பவர் எங்களது சமுதாயத்தைச் சேர்ந்தவர். பெருமாள் என்பவர் எனது கணவர் மற்றும் என்னிடம் அமைச்சரின் உதவியாளர் ஹரிபாபு என்பவரை நன்கு தெரியும் என்றும் அவரிடம் சொல்லி வேலை வாங்கி தருவதாக சொன்னார். ஹரிபாபு என்பவர் அரசு நர்ஸ் வேலைக்கு ரூபாய் 2 லட்சம் பணம் கேட்டதாக பெருமாள் எங்களிடம் கேட்டார். பெருமாளும், ஹரிபாபுவும் எங்களை சென்னைக்கு வர சொன்னதின் பேரில் நாங்கள் சென்னை சேப்பாக்கம் பிரைம் மார்க் என்ற லாட்ஜில் 16.08.2013 அன்று அவர்களை சந்தித்து பெருமாள் என்பவரிடம் ரூபாய் ஒரு லட்சம் செலுத்தினோம். பெருமாள் அந்த தொகையை வாங்கி ஹரிபாபு என்பவரிடம் கொடுத்தார். அப்போது வீரகோபால் என்பவரும் அங்கு இருந்தார். ஹரிபாபு என்பவர் அதை தனது டைரியில் குறித்துக் கொண்டார். ஹரிபாபு என்பவர் மீதம் ரூபாய் ஒரு லட்சத்தை கேட்டபோது பணிக்கான உத்தரவு வந்தால் தான் கொடுப்போம் என நான் கூறினேன். அதன் பிறகு ஹரிபாபுவிடம் ஒருமுறை கேட்டோம். அதன் பிறகு பெருமாள் என்பவரிடம் கேட்டபோது பணத்தை

வாங்கிக் கொள்ளலாம் என்று கூறினார். அதன் பிறகு பெருமாள் என்பவர் போன் எடுக்கவில்லை. பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக எனது கணவர் சிவராமன் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வேலை சம்பந்தமாக பணம் கொடுக்கும் சமயத்தில் குறிஞ்சி மருத்துவமனையில் நர்சாக பணிபுரிந்து வந்தேன். வீரகோபால் மூலமாகத்தான் எதிரிகள் எனக்கு பழக்கம் என்றால் சரிதான். வீரகோபால் மூலமாகத்தான் பெருமாளிடம் பணம் கொடுத்தோமோ என்றால் இல்லை பெருமாளிடம் தான் பணம் கொடுத்தோம். ஒரு லட்ச ரூபாய் பணத்தை எந்த வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தோம் என்றால் வங்கியில் இருந்து எடுக்கவில்லை நகையை அடமானம் வைத்து ரொக்கமாகத்தான் கொடுத்தோம். நகையை அடமானம் வைத்ததற்கான ஆதாரத்தை போலீசாரிடம் நான் கொடுக்கவில்லை. நான் எதிரிகளிடம் பணமே கொடுக்கவில்லை என்றும் போலீசாரின் கையிருப்பு சாட்சியாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் இடமானது சென்னை என்பதால் நான் சென்னையில் தான் புகார் கொடுக்க வேண்டும் இங்கு புகார் கொடுப்பதற்கு அதிகார வரம்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் தான் புகார் கொடுத்தார் நானும் அவருடன் சென்றிருந்தேன். போலீசார் எனது கணவரை விசாரித்து தான் வாக்குமூலம் பெற்றனர் ஆனால் நானும் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் நான் இங்கு சாட்சி சொல்ல தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு பணம் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு பணம் கொடுத்திருந்தால் அதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் கொடுத்திருப்பேன் என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரகாஷ் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2025 சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் கோபிசெட்டிபாளையத்தில் வசித்து வந்து எலக்ட்ரிக்கல் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனது கடைக்கு 2013 ஆண்டு மோட்டார் பார்ப்பதற்காக பெருமாள் என்பவர் கடைக்கு வந்தார். பெருமாள் என்னிடம் எனது மகன் என்ன வேலை பார்ப்பதாக கேட்டார் நான் எனது மகன் வேலை எதுவும் செய்யவில்லை என்று சொன்னபோது அவருக்கு வேலை வாங்கித் தருவதாக என்னிடம் சொன்னார். நான் அதற்கு ஒப்புக்கொண்ட போது எனது மகனுக்கு கம்ப்யூட்டர் ஆபரேட்டர் பணி வாங்கி தருவதாகவும் அதற்கு 4,00,000/-ம் ஆகும் என்றும் கூறி முதல் தவணையாக 4,00,000/-ம் கேட்டார். நான் அவரிடம் 29.12.2013 அன்று ரூபாய் ஒரு லட்சத்தை கோபிசெட்டிபாளையத்தில் உள்ள எனது நண்பர் குமாரின் கடையில் வைத்து பெருமளிடம் கொடுத்தேன். அதன்பிறகு கோபியில் வைத்து ரூபாய் 50,000/-த்தை 2014 ஆம் ஆண்டு இரண்டாவது மாதம் பெருமாளிடம் கொடுத்தேன். 2014 ஆம் ஆண்டு அதே மாதம் ஈரோட்டில் வைத்து ரூபாய் 25,000/-த்தை பெருமாளிடம் கொடுத்தேன். அதன்பிறகு சத்தியமங்கலத்தில் வைத்து ரூபாய் 25,000/-த்தை பெருமாளிடம் கொடுத்தேன். அதன்பிறகு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்திருப்பதாக

சொன்னதன் பேரில் சென்னை சரவணபவன் ஹோட்டலில் வைத்து ரூபாய் 75,000/-த்தை பெருமாளிடம் கொடுத்தேன். அங்கு பெருமாள் என்பவருடன் இரண்டு பேர் இருந்தனர் அவர்களில் ஒருவர் பெயர் ஹரிபாபு என்று சொன்னார்கள். மற்றொருவர் பெயர் எனக்கு தெரியவில்லை. அதில் ஹரிபாபு என்பவர் அமைச்சரின் உதவியாளர் என என்னிடம் சொன்னார்கள். அதன் பிறகு எனது மகனுக்கு வேலை கிடைத்து விட்டது என்றும் திண்டுக்கல்லுக்கு சென்று பணியில் சேருமாறு ஹரிபாபு மற்றும் அவருடன் வந்தவர்கள் கூறி எனது மகனின் அசல் சான்றிதழ்களை வாங்கி சென்று விட்டனர். பின்னிட்டு ஒரு மாதம் கழித்து திண்டுக்கல்லுக்கு சென்று எனது மகனின் அசல் சான்றிதழ்களை பெற்று வந்தோம். அதன்பிறகு பெருமாள் என்பவரிடம் பணி குறித்து கேட்டபோது அவர் வந்துவிடும் என்று கூறினார் ஆனால் பணி எதுவும் கிடைக்கவில்லை. அதன் பிறகு பெருமாள் என்பவரை கைது செய்து விட்டதாக கேள்விப்பட்டு நான் திண்டுக்கல் சென்று புகார் கொடுத்தேன். அதன்பிறகு ஈரோடு மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததை வீடியோ எடுத்து அதை சிடியாக போட்டு புகைப்படத்துடன் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு பெருமாள் தான் பழக்கம். எனக்கு பெருமாள் மோட்டார் வாங்க வந்த வகையில் எனக்கு பழக்கம். நான் எதிரிகளுக்கு பணம் கொடுத்த விவரம் எங்கிருந்து வந்தது என்பதற்கான விவரத்தை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை ஆனால் என் கையில் இருந்த பணத்தை தான் நான் கொடுத்தேன். நான் எப்போதும் வங்கியில் பணம் வைக்கும் பழக்கம் இல்லை. நான் சொல்வது போல் எதிரிகளுக்கு பணம் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு கொடுத்திருந்தால் அதற்கான ஆதாரம் வைத்திருப்பேன் என்று சொன்னால்

நான் பணத்தை பெருமாளிடம் எண்ணி கொடுத்த போது தான் புகைப்படம் எடுத்தேன் அதை போலீசாரிடம் கொடுத்துள்ளேன். நான் காவல் நிலையத்தில் என்ன தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் திண்டுக்கல் காவல் நிலையத்திலும், ஈரோடு மாவட்ட காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எங்கள் ஊர் திருவிழாவிற்கு எதிரி வருவது வழக்கம் என்றால் இல்லை. எதிரி எங்கள் ஊர் திருவிழாவிற்கு கூத்து ஆடுவதற்காக வந்தபோது நாங்கள் ஊர் பொதுமக்கள் சேர்ந்து எதிரிக்கு பணம் கொடுக்கும் போது புகைப்படம் எடுத்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரிகளின் ஒப்புதலின் பேரில் தான் புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி யார் என்றே தெரியாது என்றால் எனது கடைக்கு வந்த வகையில் பழக்கமானது. நான் எனது கடையில் பழைய மோட்டார் ரீவைண்டிங் செய்து விற்பனை செய்து வருகிறேன். அந்த பழைய மோட்டாரில் திருட்டு மோட்டார் வரும் அதை நான் வாங்குவது வழக்கம் என்றால் இல்லை. என் மீது எதிரி பெருமாள் காவல் நிலையத்தில் ஏற்கனவே ஒரு முறை புகார் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. அதனால் எதிரிக்கும், எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் இல்லை. அதனால் போலீசார் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யும்போது என்னை சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டதன் பேரில் நான் சாட்சியாக இருந்தேன் என்றால் சரியல்ல. எனது மகனின் அசல் ஆவணங்களை எதிரிகள் வாங்கிச் சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. திருவிழாவின் போது எதிரிகளுக்கு கொடுத்த பணத்தை புகைப்படம் எடுத்ததை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2013 ஆம் ஆண்டு கையடக்க செல்போன் வரவில்லை என்றால் சரியல்ல கேமரா செல்போனில் தான் புகைப்படம் எடுத்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.